2nd November 1966]

(இ) அப் பாலம் தற்போது அமைக்கப்படுவதைவிட உயரமாக மாற்றி அமைக்குமாறு அப் பாலத்திற்கு அஸ்திவாரமிட்ட காலத்திலிருந்தே தொடர்ந்து பொது மக்களிடமிருந்தும், ஸ்தாபனங்களிலிருந்தும் முறையீடுகள் சர்க்காருக்கு வந்து கொண்டுள்ளனவா ?

(உ) அக்கோரிக்கைகளின் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The estimated cost of the causeway across the Thambaraparani at Eral is Rs. 7.20 lakhs.

(b) Yes, representations have been received from the public.

(c) The representations have been examined and it has been found that the present design is adequate to meet observed flood conditions.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரத்திலிருந்து, அந்த ரோடுக்காக ஆரம்பத்தில் ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்றிருந்த நிலங்கள் விலே மதிப்புள்ள நஞ்சை நிலங்களாய் இருந்தன என்ற விவரம் தெரிகிறது. ஆனல், இரண்டாவது தரம் போட்ட பிளான் கூட மாற்றப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஒரு சிறு பகுதி நஞ்சையாக இருந்ததால் விட்டுவிட்டார்கள். பிறகு முற்றிலும் புஞ்சைப் பகுதியாகவே இருக்குமிடங்களிலே போடுவதற்குத் திட்டமிட்டு ஏறக்குறைய எல்லாப் பகுதிகளிலும் ரோடு போடப்பட்டுவிட்டது. ஆனல், அது அழிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சைப் பகுதியில் போடுவதை விட்டுவிட வேண்டிய அவசியமில்லே. இதனல் அந்தப் பகுதியின் குறுக்கே ஓடுகின்ற பாய்மான வாய்க்காலுக்கு மண்ணினல் சேதம் வந்திருப்பதாகவும், பாய்மான வசதிகள் குறைவதாகவும் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் முறையிட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : விவசாயிகள் முறையீடு சம்பந்தமாய் விவரம் ஒன்றுமில்லே. அதை மாற்றி அமைப்பதற்குப் பல முயற்சிகள் நடந்தன. கடைசியாக சீஃப் எஞ்சினியர் அவர்களே நேரடியாகப் போய்ப் பார்த்துப் பரிசீலனே செய்து ப்ளான் வந்து, அந்தப் ப்ளானேத்தான் அரசாங்கம் அங்கீகாரம் செய்திருக்கிறது.

கலெக்டரிடம் நேரிடை மனுக்கள்

*324 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் 1965 ஜனவரி முதல் இன்று வரையில் கலெக்டரிடம் கொடுக்கப்பட்ட திங்கட்கிழமை தோறும் வரும் குறைகளே தெரிவிக்கும் மகஜர்கள் (Monday petitions) எத்தனே ?

(இ) அவைகளுள், தீர்வு காணப்பட்ட, நிராகரிக்கப்பட்ட மகஜர்கள் முறையே எத்தனை?

(உ) இத்திட்டத்தை மேலும் அமுலாக்குவது அல்லது எடுத்து விடுவது குறித்து அரசு எடுத்துள்ள முடிவு என்ன?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 2,589.

(இ) (i) 2,426.

(ii) 1,537.

(உ) தற்போது செயலிலுள்ள வேலைத் திட்டத்தைக் கைவிடும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. செ. மாதவன் : பொதுவாக சட்ட மன்ற உறுப்பினர்கள் எழுதி அனுப்பக்கூடிய குறைகளைப் பற்றிய மனுக்களுக்கு உடனடியாகப் பதில் அனுப்ப வேண்டுமென்று ராஜாஜி காலத்தில் ஒரு ஜி.ஓ. போடப்பட்டதாகத் தெரிகிறது. அந்த ஜி.ஓ. இப்போது அமலில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த மாதிரி கொடுக்கப்பட்ட மனுக்களுக்குப் பதில் அனுப்ப வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : அந்த ஜி.ஓ. சம்பந்தமாகத் தனிக் கேள்வி போட வேண்டும். இதைப் பொருத்தவரை, கலெக்டர்களிடம் கொடுக்கப்பட்ட மனுக்களின்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வட ஆற்காடு மாவட்டத்தில் 'மன்டே பெடிஷன்ஸ்' கொடுக்கப்பட்டு பல திரும்பி வந்து விடுகின்றன. இன்ன மாதிரிக் குறைகளுக்குத்தான் மனுப் போட வேண்டுமென்ற விதி ஏதாவது இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : அப்படி ஒன்றும் இல்லை.

மவுண்ட் ரோட்டிலுள்ள சுரங்கபாதை

*325 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மவுண்ட் ரோட்டில் அமைக்கப்படுகிற பாதாள சுரங்கத்துக்கு "மதிப்பீடு" தொகை எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமையா : ரூபாய் 13.75 லட்சம்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தப் பாதாளச் சுரங்க வேலைகள் எப்போது முடிவடையும்? பொதுமக்கள் உபயோகத்திற்கு எப்போது திறக்கப்படும்?

கனம் திரு. வெ. ராமையா : இதைப் பற்றிய விவரம் இல்லை. விரைவில் வேலை முடிந்து உபயோகத்திற்கு வரும் என்று நினைக்கிறேன்.